

தேனி வடக்கு மாவட்டம் போடி தொகுதியில் உள்ள பள்ளிவாசல் பகுதியில் திமுக அரசின் சாதனை திட்டங்களை எடுத்துரைத்து முன்னாள் முதல்வர் கழக வேட்பாளர் ஓ பன்னீர்செல்வம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் உடன் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்பி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் வடக்கு மாவட்ட இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஆசிப் கான் மற்றும் மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்




மதுரை வடக்கு மாவட்டம் மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் அறிமுக கூட்டம் பரவையில் நடைபெற்றதில் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கழக வேட்பாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் ரகு பாலாஜியை அறிமுகம் செய்துவைத்து சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், தனச்செல்வம், பரவை மனோகரன், முருகானந்தம், ஆர்.கே.ஜெயராமன், வி.பி.திருக்குமரன், சிறைச்செல்வன், என்.எஸ்.மணி, ராசாமணி, சுதன், காவேரி, சசிதேவா, மதி வெங்கடேஷ், அன்பழகன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்



மதுரை மாநகர் வடக்கு தொகுதிக்கான தலைமை தேர்தல் காரியாலயம் புதூர் பகுதியில் கூட்டணி கட்சியினர் அனைவரின் முன்னிலையில் மாநகர் மாவட்ட செயலாளர் வடக்கு தொகுதி வேட்பாளர் கோ தளபதி தலைமையில் உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் தேர்தல் காரியாலத்தை திறந்து வைத்த போது எடுத்த படம் உடன் மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ. வேலுச்சாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக வட்ட கழக செயலாளர் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் திரளான கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சியினர் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் கழக நிர்வாகிகளுடன் காணொளி வாயிலாக உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், கலந்து கொண்டு உரையாற்றினார். உடன் முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா, செயற்குழு உறுப்பினர் அகமது தம்பி, நகர் மன்ற தலைவர்கள் நாசர் கான், கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், உட்பட ஒன்றிய பேரூர் கழக, நகர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஜீ.வி.மார்கண்டேயன் விளாத்திகுளம் சாலையம் தெரு பகுதி வியாபார பெருமக்களிடம் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் செய்தார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி ஒன்றியத்தைச் சார்ந்த ஆவியூர், அரசகுளம், மாங்குளம் ஆகிய ஊராட்சிகளின் கழக நிர்வாகிகள் கூட்டம் மல்லாங்கிணற்றில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் திருச்சுழி திமுக வேட்பாளர் தங்கம் தென்னரசு பேசினார். இதில் பங்கேற்று, கள நிலவரங்களைக் கேட்டறிந்து, ஊராட்சிகளில் உள்ள அனைத்து கிராமங்களிலும் உதயசூரியன் சின்னத்தை உதிக்கச் செய்ய மேற்கொள்ள வேண்டிய ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா குமார குறிச்சி மற்றும் பல்வேறு ஊர்களில் உள்ள அ.தி.மு.க. உரிமை மீட்பு குழு ஓ.பி.எஸ் அணி இளைஞர் அணி பாஸ்கரன், செல்வம்,ஜெயபால், சந்திரசேகரன்,பூவேந்திரன் உட்பட 100க்கும் மேற்பட்டவர்கள் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் முன்னிலையில் கழகத்தில் சேர்ந்தார்கள். உடன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ.மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலம் தொகுதி கழக வேட்பாளரும் மாவட்ட செயலாளருமான சேடபட்டி மு. மணிமாறன் திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட கப்பலூர், உச்சப்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் வீதி வீதியாக சென்று கிராம மக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்



கோவில்பட்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கயத்தாறு,கடம்பூர் மற்றும் சுற்றுவட்டார பகுதியில் உள்ள தேவாலயங்கள், மசூதிகள் மற்றும் கோவில்களுக்கு சென்று மக்களை சந்தித்தும் கழகத்தின் மூத்த நிர்வாகிகளை சந்தித்து வாழ்த்து பெற்று வெற்றி சின்னமாம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கழக வேட்பாளர் கா.கருணாநிதி பிரச்சாரம் மேற்கொண்டார் நிகழ்வில் எஸ்.வி.எஸ்.வி. மாணிக்கராஜா, கயத்தார் ஒன்றிய செயலாளர்கள் சின்ன பாண்டியன், கருப்புசாமி, கயத்தாற் பேரூர் கழக செயலாளர் சுரேஷ் கண்ணன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் அய்யாதுரை பாண்டியன், கோதண்டராமன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனிதெற்கு மாவட்டம், ஆண்டிபட்டி பேரூர் பகுதியில் ஆண்டிபட்டி தொகுதி கழக வேட்பாளர் மகாராஜன் எம்.எல்.ஏ. வை ஆதரித்து தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சேது ராஜா மனைவி ஜெயப்பிரியா தி.மு.க. அரசின் சாதனைகள், திட்டங்களை சொல்லி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.